மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே அதற்கான தகுதிகளை அவர்கள் பெற்றிருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். அவர்கள் பிற வகுப்புகளிலே பாடங்களை எடுத்து நடத்துவது என்றால், அதற்கான தகுதி, கல்வியறிவு, பயிற்சி இவைகளைப் பெற்றிருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். இப்போதைக்கு 150 பேரை முழுநேர ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளலாம் என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

*138 *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Craft Teachers who have passed B.A. Degree Examination, are not permitted to join the shortened B.Ed. Course ; and

(*b*) if so, whether the Government propose to take suitable action to facilitate their admission to that Course?

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.ஏ. பட்டம் பெற்றுள்ள கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் குறுகியகால பி.எட். வகுப்பில் சேர அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்கள் அவ்வாறு சேர அனுமதிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை அரசு எடுக்கக் கருதியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, கைத்தொழிலாசிரியர்களாக பணியாற்றுகின்றவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு பெற்றிருந்தால், அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்கான தேர்வினை டி.எஸ்.எல்.ஸி. எழுத அனுமதிக்கப்படுகின்றார்கள். அதேபோல அவர்கள் பி.ஏ. பட்டப்படிப்பு அல்லது பி.எட். அல்லது பி.டி. எழுதுவதற்கான அனுமதியினை அரசு அவர்களுக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, என்னிடமுள்ள குறிப்புகளின்படி, கைத்தொழிலாசிரியர்கள் பி.ஏ. அல்லது பி.டி., யில் சேருவதற்கான அனுமதி மறுக்கப்படுவதாக தகவல் இல்லை. அவர்கள் எந்தவிதமான பாடத்திட்டங்களை எடுத்திருக்கின்றார்கள் என்பதைப் பொருத்திருக்கிறது. எகனாமிக்ஸ் அல்லது ஸயன்ஸ்

ஸப்ஜெக்டை எடுத்திருந்தால், இது பொருந்தாது. ஆனால் சரித்திரம் (வரலாறு) போன்றவற்றை எடுத்திருந்தால் அவர்கள் அதிலே சேரலாம். ஆனால் முழுத்தகவலும் கைவசம் இல்லை.

Representation to the Hon. Minister for ***Education.***

*139 *Q.*—Pulavar O. ARIVUDAINAMBI (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any representation was submitted to the Hon. Education Minister at the First Conference of the Tamil Nadu Inter-Collegiate Employees Welfare Association, held on 11th February 1973; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு

புலவர் ஒ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 11—2—1973ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு அனைத்துக் கல்லூரி ஊழியர்கள் பொதுநலக் கழகத்தின் முதல் மாநாட்டின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) கோரிக்கை மனு அரசுக்கு வந்துள்ளது.

(இ) சில கோரிக்கைகளின் மேல் ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. சில கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அரசின் பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் கோரியுள்ள சில கோரிக்கைகளை பல்கலைக் கழகம்தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

அவர்கள் கோருவது கல்லூரி ஊழியர்களின் ஒய்வு ஊதிய திட்டம். கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—62-லிருந்து அளித்ததைப் போலவே கல்லூரி ஊழியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கான தளர்த்தப்பட்டுள்ள ஒய்வு ஊதிய திட்டம் 2—10—70